# 4

# இயேசு எப்போது, எங்கே, மற்றும் எவ்விதம் வாழ்ந்தார்?

*சுவிசேஷங்களில் இயேசுவின் கதை, "முன்னொரு காலத்தில், இயேசு என்னும் பெயரில் ஒரு மனிதர் இருந்தார்" என்று துவங்குவதில்லை. ஒரு காலத்தில் மற்றும் ஒரு இடத்தில் மெய்யாகவே வாழ்ந்த ஒருவர் என்று சிந்திப்பதற்கு பதிலாக; அநேக மக்கள் அவரைப் பற்றி இவ்விதமாகத் தான் சிந்திப்பதாக தோன்றுகிறது. ஆனால் சுவிசேஷங்கள் இதை சொல்வதில்லை. இயேசுவின் வரலாற்று ரீதியான மற்றும் ஊழியம் பற்றி லூக்காவின் மனதில் பதியவைக்கும் வலியுறுத்தலை கவனியுங்கள்:*

> *திபேரியுராயன் ராஜ்யபாரம்பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே, பொந்தியுபிலாத்து யூதேயாவுக்குத் தேசாதிபதியாயும், ஏரோது காற்பங்கு தேசமாகிய கலிலேயாவுக்கு அதிபதியாயும், அவன் சகோதரனாகிய பிலிப்பு காற்பங்கு தேசமாகிய இந்துரேயாவுக்கும் திராகொனித்தி நாட்டிற்கும் அதிபதியாயும், லிசானியா காற்பங்கு தேசமாகிய அபிலேனுக்கு அதிபதியாயும், அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரியராயும் இருந்த காலத்தில் வனாந்தரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று (லூக்கா 3:1, 2).*

*லூக்கா ரோம அரசர், யூதேயாவின் ஆளுநர், பாலஸ்தீனத்தின் பல்வேறு பகுதிகளின் காற்பங்கு அதிபதிகள் மற்றும் யோவான் மற்றும் இயேசுவானவர் ஆகியோர் தங்கள் பொது ஊழியங்களை துவங்கின நாட்களில் யூதர்களின் பிரதான ஆசாரியர்களையும் பெயர் குறிப்பிட்டு அழைத்துள்ளார். அதுபோலவே மத்தேயு, "ஏரோது ராஜாவின் நாட்களில்" இயேசு யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறந்தார் என கூறுகிறார் (மத்தேயு 2:1). மத்தேயு மற்றும் லூக்காவில் பட்டியலிடப்பட்டுள்ள எல்லா ஆட்சியாளர்களும், புதிய ஏற்பாடு நீங்கலாக, மற்ற எழுத்து மூலங்களில் இருந்தும் வரலாற்று ஆசிரியர்களுக்கு நன்கு அறியப்பட்டவர்களாயிருக்கிறார்கள், மற்றும் அவர்களுடைய தேதிகள் கிடைக்கும் தகவல்களில் இருந்து சரியாக குறிப்பிடப்பட முடியும். சுவிசேஷ எழுத்தாளர்கள் இயேசுவின் வாழ்க்கையை, வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட ஒரு காலம் மற்றும் இடத்தில் விரைவாக அடையாளப்படுத்தினார்கள் என்று தெளிவாக தெரிகிறது. அந்த காலம் என்னவாக மற்றும் அந்த இடம் எதுவாக இருந்தது?*

## அவர் எப்போது வாழ்ந்தார்?

*இயேசுவுக்கும் நமக்கும் இடையில் மிக நீண்டகால இடைவெளி இருந்தாலும், நியாயமான நிச்சயத்தோடு அவருடைய வாழ்க்கைக்கான தேதியை*

நாம் குறிப்பிட முடியும், *துல்லியமான* வருடங்களை குறிப்பாக கூறுங்கள் என்று குறிப்பிடாதவரை இது சாத்தியமாக இருக்கிறது. நாம் அவருடைய பிறப்போடு துவங்குவோமாக.

மத்தேயு 2:1 இயேசு, "ஏரோது ராஜாவின் நாட்களில்" பிறந்தார் என்று கூறுகிறது (காணவும் லூக்கா 1:5). ரோமாபுரி, இயேசுவின் காலத்திலும் அதற்கு பின்னர் பல நூற்றாண்டுகளாக பாலஸ்தீனத்தை தன் உறுதியான கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதிலும் ரோமர்கள், யூதர்கள் தங்கள் சொந்த "பொம்மை ராஜாக்களை" வைத்துக்கொள்ள அனுமதித்தனர். அவர்கள் ரோமாபுரியால் தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்களாக இருந்தார்கள் மற்றும் பேரரசின் நலன்களை காப்பதே அவர்களுடைய முதல் முக்கியமான வேலையாயிருந்தது. ஐந்து "ஏரோதுகள்" புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளார்கள், "ஏரோது" என்பது ஒரு தனிப்பட்டப் பெயராயிராமல், ஒரு ராஜவம்ச பட்டப்பெயராக இருந்தது.[1]

இயேசு பிறந்தபோது அரசாண்ட ஏரோது, "மகா ஏரோது" என அழைக்கப்பட்டான். நாம் அவனைப் பற்றி அதிகமாக (பெருமளவில் ஜோசிபஸ் மூலமாக) அறிய முடியும். அவன் ஒரு சுவாரஸ்யமான கதாபாத்திரமாக இருந்தான். அவன் ஒரு மிருகத்தனமான, மூட நம்பிக்கையுள்ள கொடுங்கோலனாக, அவனுடைய பதவிக்கு இடையூறாக இருப்பார்கள் என சந்தேகிக்கும் எவரையும் மற்றும் ஒவ்வொருவரையும் கொன்றுபோட்டான். இது, அவன் மத்தேயு 2:16-18 இல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, "குற்றமற்ற குழந்தைகளை கொலைசெய்ததால்" நிரூபிக்கப்பட்டுள்ளது, இந்த சம்பவம் வேதாகம ஆசிரியர்கள் அல்லாதவர்களால் உறுதி செய்யப்படவில்லை, ஆனால் ஏரோதுவின் குணாதிசயத்தை குறித்து நாம் அறிந்துள்ள வகையில் பொருத்தமானதாயிருக்கிறது. அப்படியானால், அவன் ஏன் "மகா பெரிய" என அழைக்கப்பட்டான்? அவன் ஒரு நல்ல நிர்வாகியாக மற்றும் ரோமர்களோடு ஒத்துப்போகிறவனாக (மிகவும் நன்றாக என அவன் சமகாலத்து யூதர்கள் நினைத்தார்கள்) இருந்தும், கவர்ச்சிகரமான பல கட்டிட திட்டங்களை நிறைவேற்றினான். எருசலேமில் இருந்த ஆலயத்தை முழுமையாக புதுப்பித்து மற்றும் பெரிதுபடுத்தி கட்டியது, இந்த கட்டுமான திட்டங்களிளெல்லாம் மிகவும் முக்கியமானதாயிருந்தது. அவன் பல கவர்ச்சிகரமான கட்டிட வளாகங்கள் மற்றும் இணைப்பு கட்டிடங்களையும் நிர்மானித்தான் (இந்த திட்டம் துவங்கப்பட்டது ஆனால் அவனுடைய ஆட்சியில் முடிக்கப்படவில்லை). இதுவெல்லாம் இயேசுவின் பிறப்பை தேதியிட எவ்வாறு நமக்கு உதவுகிறது? ஜோசிபஸ், மகா ஏரோது கி.மு. 37 முதல் கி.மு. 4 வரை அரசாண்டதாக குறிப்பிட்டார் மற்றும் புதிய ஏற்பாடு இயேசு ஏரோதின் ஆட்சி காலத்தில் பிறந்தார் என கூறுகிறது. கி.மு. ("கிறிஸ்துவுக்கு முன்") பகுதி ஒரு பிரச்சனையாக இருக்கிறது, ஏனெனில் அது இயேசுவின் பிறப்பை கி.மு. வில் வைக்கிறது! நாம் நமது நாட்காட்டியில் ஒரு தவறை உடையவர்களாக இருக்கிறோம். அவைகள் இயேசுவின் பிறப்பிலிருந்து கணக்கிடப்படவேண்டும், ஆனால் டென்னிஸ் ஸ்மால் என்பவர் (நமது நாட்காட்டியை வடிவமைத்த ஒரு முனிவர்) கணக்கிடுவதில் சிறிய தவறு செய்து விட்டார். அது ஆராயப்பட்டபோது, இது இயேசுவானவரின் பிறப்பை கி.மு. 4ல் அல்லது அதற்கு சற்று முன்னதாக வைக்கிறது, மகா ஏரோது இந்த காலத்தில் வாழ்ந்தவரும் மற்றும் ஆட்சி

*செய்தவருமாயிருந்தார்.*

*மத்தேயு 2:16-18ஐ மிகவும் கவனமாக கவனியுங்கள். (அப்போது ஏரோது இயேசுவை அழிக்க முடியும் என்ற நம்பிக்கையில், பெத்லகேமிலிருந்த எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான்) இது சம்பவித்தபோது, இயேசு இரண்டு வயது உள்ளவராக இருந்திருக்கலாம். ஏரோது, "சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே பெத்லகேமிலும் அதன் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குப்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கெலைசெய்வதின் மூலம்" புதிதாய் பிறந்த ராஜாவை அழித்துவிடமுடியும் என நினைத்தான். அவன் இது குறித்து கவனமாக கணக்கிட்டான். ஆகவே இயேசுவுக்கு இரண்டு வயது இருந்திருக்கலாம் என நாம் பாதுகாப்பாக முடிவெடுக்கலாம், ஆனுல் அநேகமாக அதை விட சற்று வயது குறைவுள்ளவராக இருந்தார். இவையெல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, இயேசுவின் பிறப்பு அநேகமாக கி.மு. 7-5 வாக்கில் இருந்திருக்கலாம் என பல ஆய்வாளர்கள் கணக்கிடுகின்றனர்.*

*இயேசுவின் வாழ்க்கை பற்றி தேதியிடுவதற்கான நமது அடுத்த குறிப்பு அவருடைய பொதுவான ஊழியத்தின் துவக்கமாக இருக்கிறது. இங்கே நாம் சுவிசேஷங்கள் ஒன்றிலிருந்து ஒரு நேரடி உதவி உடையவர்களாக இருக்கிறோம். லூக்கா 3:23, இயேசு தமது ஊழியத்தை துவங்கினபோது, "ஏறக்குறைய முப்பது வயதுடையவரானார்" என கூறுகிறது. நாம் விரும்புகிறபடி லூக்காவின் அறிக்கை அவ்வளவு குறிப்பானதாக இல்லை (இயேசு 28? 30? 32? வயதுடையவராக இருந்தாரா?). இருப்பினும், அது உதவியாக இருக்கிறது. சுவிசேஷங்கள் கூறுவதை பார்த்தால், தனது உறவினரான யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெறுவதற்காக அவர் தோன்றுகிற வரையில் நன்கு அறியப்படாதவராக/பிரபலமில்லாதவராக இருந்தார் என்றே தோன்றுகிறது. லூக்கா 3:1, 2, யோவானின் ஊழிய நடவடிக்கைகளை, "திபேரியுராயன் ராஜ்யபாரம் பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே ..." வைக்கிறது. அது கி.பி. 27-28 ஆக இருந்திருக்கலாம். இது நாம் ஏற்கெனவே நிலைப்படுத்தினவற்றுடன் சரியாக பொருந்துகிறது - அதாவது இயேசு கி.மு. 7 மற்றும் கி.மு. 5க்கு இடைப்பட்ட காலத்தில் பிறந்திருந்தார் மற்றும் அவர் தம்முடைய பொதுவான ஊழியத்தை துவங்கினபோது "ஏறக்குறைய முப்பது வயதுள்ளவராயிருந்தார்" (இது யோவான் தன்னுடைய ஊழியத்தை துவங்கின அதே காலமாயிருந்தது).*

*நாம் இயேசுவின் ஊழிய கால அளவைக்கூட உத்தேசமாக கணக்கிடலாம். அவருடைய பொதுவான ஊழியம் அவருடைய மரணத்துடன் நிறைவுற்றதால், அவர் எப்போது மரித்தார் என்பதை நாம் அறிவோம், அவருடைய ஊழிய கால அளவை நிச்சயமாக நம்மால் உறுதி செய்ய முடியுமானால் அவருடைய உத்தேச வயதை நாம் உறுதி செய்யலாம் - மற்றும் நாம் அதை செய்ய முடியும்.*

*நாம் இதை, இயேசுவானவர் யூத வருடத்தின் முக்கியமான பண்டிகையாயிருந்த பஸ்காவை ஆசரிப்பதற்காக எத்தனை முறை எருசலேம் சென்றார் என்று சுவிசேஷங்கள் கூறுகிறதோ, அதிலிருந்து கணக்கிடுகிறோம். சுவிசேஷங்கள் ஒவ்வொன்றும் (மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா) இயேசுவானவர் எருசலேமில் கலந்து கொண்ட ஒரே ஒரு பஸ்காவை பற்றி மட்டும் குறிப்பிடுகின்றன - அந்த சமயத்தில் அவர் சிலுவையில் அறையப்பட்டார். அந்த அளவோடு நாம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தால், இயேசுவின் பொதுவான*

*ஊழியம் (அதாவது, அவருடைய ஞானஸ்நான காலம் துவங்கி, வனாந்திர சோதனைகள் மற்றும் அவருடைய மரணம் வரை) ஒரு ஆண்டு மட்டும் அல்லது அதற்கு குறைவான அளவு நீடித்தது என்ற முடிவுக்கு ஒரு வேளை வந்துவிடுவோம். இருப்பினும்,யோவான் சுவிசேஷம் இயேசுவானவர் மூன்று தனிப்பட்ட காலங்களில் பஸ்காவுக்காக எருசலேமுக்கு சென்றதாக குறிப்பிடுவதால், இரண்டு முதல் மூன்று ஆண்டுகளின் ஊழியக்கால அளவை முன்வைக்கிறது (யோவான் 1:13; 6:4; 11:55). இது குறைந்த அளவாக இரண்டு ஆண்டுகளையும் அதிக அளவாக மூன்று ஆண்டுகளையும் உள்ளடக்கியதாக இருக்கக்கூடும். பொதுவான ஊழியம் நாம் முன்னதாக முடிவுக்கு வந்தபடி கி.பி. 27-28 இல் துவங்கி இருந்தால், பின்னர் இயேசுவானவர் கி.பி. 30 இல் மரித்தார் என்றாகும். இது இயேசு மற்றும் அவர் துவங்கின சபை ஆகியவை தொடர்பான உலக மூலங்களோடு (அதாவது, வேதாகமத்தில் இல்லாத மூலங்களோடு) ஒத்துப்போகிறது.*

*"இயேசு எப்போது வாழ்ந்தார்?" என்ற கேள்விக்கு நாம் பதில் அளிக்கும் போது, நாம் பாதுகாப்பாக அவர் கி.மு. 7-5 வாக்கில் பிறந்தார், தனது பொதுவான ஊழியத்தை கி.பி. 27-28 வாக்கில் துவங்கினார் மற்றும் அவர் கி.பி. 30 வாக்கில் மரித்தார் என பதில் அளிக்கலாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம் தொடர்பான காரியத்திற்கு இவைகள் ஒரு நெருக்கமான கணக்கிடுதல்களாக இருக்கின்றன!*

## *அவர் எங்கே வாழ்ந்தார்?*

*புதிய ஏற்பாடு (மற்ற மூலங்கள் கொடுப்பதுபோல) இயேசு பாலஸ்தீனம் என அறியப்பட்ட தேசத்தில் வாழ்ந்தார் மற்றும் மரித்தார் என்பதற்கு போதுமான அளவு சான்றுகளை கொடுக்கிறது.*

*இந்த பகுதி ஒரு நீண்ட மற்றும் வளமான அதே சமயத்தில் சோகமான வரலாற்றை உடையதாக இருந்தது. இதுதான் தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு அவர்கள் "இஸ்ரவேல் மக்கள்" என்று அழைக்கப்படுவதற்கு முன்பாகவே கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்த தேசமாக இருந்தது. அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தப்பிய பிறகு, அவர்கள் அவிசுவாசத்தினிமித்தம் தேவன் அவர்களை நாற்பது ஆண்டுகளாக வனாந்திரத்தில் நடத்தினார். (அவர்கள் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே தேவனுடைய வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கக்கூடும்! காணவும் எண்ணாகமம் 13; 14 அதிகாரங்கள்.) இறுதியாக அவர்களால் யோர்தானை கடந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் பிரவேசிக்க முடிந்தது. அந்த காலத்தில் இது "கானான்" என அறியப்பட்டிருந்தது மற்றும் அதின் குடிகள் "கானானியர்கள்" ஆக இருந்தார்கள். இஸ்ரவேலர்கள்அந்த தேசத்தை பிடித்தபின், அது "இஸ்ரவேல்" என அறியப்படலாயிற்று. பிற்காலத்தில், ரோமர்கள் அதை "பாலஸ்தீனம்" என அழைத்தார்கள், இன்றும் இது கடைசியாக குறிப்பிடப்பட்ட இந்த இரண்டு பெயர்களாலும் அறியப்படுகின்றன.[2]*

*பாலஸ்தீனம் ஒரு சிறிய நாடாக இருக்கிறது. இயேசுவின் நாட்களில் அது மெரிலாந்து மாநிலத்தின் அளவாக அல்லது ஆப்பிரிக்க நாடான டோகோவின் பாதி அளவாக இருந்தது, இஸ்ரவேலர் அதை பிடித்தபின், எப்போதும் மகிமையானதாக இல்லாதிருந்தாலும், ஆர்வமான ஒரு வரலாற்றை உடையதாக இருந்தது. மெசொப்பொத்தாமியா (அசீரியா, பாபிலோன் மற்றும் பெர்சியா*

*ராஜ்யங்கள் இங்கே இருந்தன) மற்றும் எகிப்திற்கு இடையில் அமைந்திருந்ததால், பாலஸ்தீனம் அளவில் சிறியதாக இருந்தபோதிலும் விரும்பப்படத்தக்கதாக இருந்தது. பாலஸ்தீனத்தை கட்டுப்படுத்துவதற்கான வல்லரசுகளுக்கிடையிலான இராணுவ போட்டி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இது அடிக்கடி தன்னைவிட பலம்வாய்ந்த அரசுகளுக்கு "இடைப்பட்ட" ஒரு தேசமாக இருந்தது. இது தன்னுடைய முதல் மூன்று ராஜாக்களின் (சவுல், தாவீது மற்றும் சாலொமோன்) ஆட்சி காலத்தில், இது ஆட்சி அதிகாரம் மற்றும் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது, ஆனால் அதற்கு பிறகு மிகவும் பெலவீனமானதாக இருந்தது. இருப்பினும், இந்தப் பகுதியைக் கட்டுப்படுத்துவது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததால் இது அநேகமாக, எப்போதும், ஏதாவது ஒரு அந்நிய நாட்டின் அதிகாரத்தின் கீழ் இருந்தது.*

*இயேசுவின் காலத்தில், அதிகாரம் செலுத்தக்கூடிய அந்நிய சக்தியாக ரோமாபுரி இருந்தது, அது பாலஸ்தீனத்தை தனக்குறியதாக கி.மு. 63ல் எடுத்துக்கொண்டது மற்றும் புதிய ஏற்பாட்டின் காலம் முழுவதும் அதற்கு அப்பாலும் அதை தொடர்ந்து கட்டுப்படுத்திக்கொண்டிருந்தது. அசீரியர்கள், பாபிலோனியர்கள், பெர்சியர்கள், கிரேக்கர்கள் மற்றும் ரோமர்கள் ஆகியோர் ஒருவர்பின் ஒருவராக இந்த மகிழ்ச்சி இல்லாத நாட்டின் மீது கட்டுப்பாடு உடையவர்களாக இருந்தார்கள். யோவான் 8:33 இல், "நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாக இருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்க வில்லை" - என்ற சில யூதர்களின் கூற்று, வரலாற்றின் தாக்கத்தில் ஒரு தேசிய பெருமையின் அடையாளமாகவே எடுத்துக்கொள்ளப்படக்கூடும். உண்மையில், அவர்கள் அநேகமாக ஒவ்வொருவருக்கும் அடிமைப்பட்டிருந்தார்கள்! அவர்கள் இதை பேசிக்கொண்டிருந்த வேளையிலும் கூட, அவர்கள் ஒரு விடுதலைபெற்ற மக்களாக இருக்கவில்லை. ரோமர்கள் உறுதியாக கட்டுப்படுத்துகிறவர்களாய் இருந்தார்கள். அவர்கள் ஏரோதுக்களை "பொம்மை அரசர்களாக" ஆளும்படி அனுமதித்திருந்தார்கள். ஏரோதியர்கள் தாங்களே இனக்கலப்பில்லாத யூதர்களாக இருக்க வில்லை. ஆனால் அவர்கள் யாக்கோபுடன் பிறந்த ஏசாவின் வழித்தோன்றல்களாக இருந்தார்கள் (யாக்கோபின் இன்னொரு பெயர் "இஸ்ரவேல்" என்பதாக இருந்தது). ஏதோமியர்கள் யூதர்களால் இகழப்பட்டார்கள். ஆகவே யூத சமயத்தின் நிலை, இயேசு பிறந்தபோது, அரசியல் ரீதியாக மற்றும் ஆவிக்குரிய ரீதியாக மிகப்பெரிய குழப்பத்தில் இருந்தது. இப்படிப்பட்ட உலகத்தில் தான் இயேசு பிறந்தார் மற்றும் மரித்தார்.*

*நாம் இயேசு பிறந்த இடத்தை குறித்து அதிக நிச்சயமுள்ளவர்களாக இருக்கலாம். மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய இருவரும், எருசலேமின் தென் திசையில் ஒரு ஐந்து கல் தொலைவிலிருந்த பெத்லகேமில் இது சம்பவித்ததாக கூறுகிறார்கள் (மத்தேயு 2:1; லூக்கா 2:1-7). இருப்பினும் பிற்காலத்தில் இயேசு "கலிலேயன்" என அறியப்பட்டிருந்தார் மற்றும் கலிலேயா பாலஸ்தீனத்தின் வடகடைசி பகுதியாக இருந்தது. அவர் ஏன் தெற்கில் பெத்லகேமில் பிறந்தார்? லூக்கா ஏன் என்பதை விளக்குகிறார். ஒவ்வொரு குடும்ப தலைவரும் தனது பூர்வீக வீட்டில்/இடத்தில் குடிமதிப்பு எழுதவேண்டும் என்ற கட்டளையினிமித்தம் இது நடந்தது - எண்ணப்படுவதற்கு மட்டுமல்ல, வரிவிதிக்கப்படுவதற்காகவும் இப்படி இருந்தது. இயேசுவின் பூமிக்குரிய பெற்றோர் மரியாள் மற்றும் யோசேப்பு ஆகியோர் கலிலேயாவிலிருந்த நாசரேத்திலிருந்து பெத்லகேமுக்கு*

நீண்ட பயணம் மேற்கொண்டனர். லூக்காவின் கூற்றுப்படி யோசேப்பு தாவீதின் வம்சத்தானும் "குடும்பத்தானுமாயிருந்தார்" எனவே அவர் "தாவீதின் நகரமாயிருந்த" பெத்லகேமில் ஆஜராக வேண்டியவராக இருந்தார். அவர் தனது கர்ப்பிணி மனைவியை தனியே விட்டுவர விரும்பவில்லை, ஆகவே அவர்கள் இருவரும் சேர்ந்தே அந்த கடினமான பிரயாணத்தை மேற்கொண்டனர் மற்றும் அங்கேதான் இயேசு பிறந்தார். யோசேப்பு மற்றும் அவர் குடும்பத்தார் மேற்கொண்ட பயணம் நமக்கு தெளிவாக தெரிவதில்லை. அவருக்கு நாற்பது நாட்கள் வயதானபோது இயேசு எருசலேம் தேவாலயத்தில் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டதை தொடர்ந்து, அது நடந்திருக்கக்கூடும் (காணவும் லேவியராகமம் 12:1-6), "அவர்கள் கலிலேயா நாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப் போனார்கள்" என்று லூக்கா 2:39 பதிவு செய்துள்ளது. இருப்பினும், மத்தேயு 2:13-23, இயேசு பிறந்த பின்னர், ஏதோ ஒரு காலகட்டத்தில், ஏரோது குழந்தையாயிருந்த இயேசுவை கொலை செய்வதை தவிர்க்கும்படி, எகிப்துக்கு போகும்படி எச்சரிக்கப்பட்டிருந்தார் என கூறுகிறது. ஒரு தொடர் தெய்வீக இடைபாடுகளின் மூலம், அவர்கள் தங்கள் நகரமாகிய நாசரேத்துக்கு திரும்பினார்கள். "எகிப்துக்குப் போனது" அநேகமாக லூக்கா 2ன் சம்பவங்களுக்கு பிறகு நடந்தது, அந்த காலம் நமக்கு சரியாக தெரியாவிட்டாலும், இயேசு நாசரேத்தில் வளர்ந்தார் (லூக்கா 4:16).

## அவர் எவ்விதம் வாழ்ந்தார்?

மத்தேயு 1 மற்றும் லூக்கா 3 ஆகிய அதிகாரங்கள் இயேசுவின் விரிவான வம்சாவழி பட்டியலை நமக்கு தருவதால், நாம் இயேசுவினுடைய மூதாதையரை குறித்து அதிகமாக அறிந்திருக்கிறோம். ஒருவருடைய சட்டரீதியான மற்றும் ஆவிக்குரிய மரபுரிமையை நிலைப்படுத்துவதற்கு, இப்படிப்பட்ட முன்னோரின் பட்டியல் யூத சமூகத்தில் மிகவும் முக்கியமானதாக இருந்தது, மற்றும் பல பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. இயேசுவின் வம்சாவழி மத்தேயுவுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது, உண்மையில் அவர் தனது சுவிசேஷத்தை இதோடு துவங்கினார். பெயர் பட்டியலை வாசிப்பது நமக்கு கடினமானதாக இருக்கலாம், ஆனால் ஒரு முதல் நூற்றாண்டு யூதருக்கு - பழைய ஏற்பாட்டில் இருந்து இயேசுவின் பிறப்பு வரை உள்ள முன்னோர் பெயர் பட்டியலை வாசிப்பது என்பது, ஒரு குடும்ப புகைப்பட தொகுப்பிலிருந்து புகைப்படங்களை பார்ப்பது போல, ஒவ்வொரு பெயரும் யூதருடைய நீண்ட வரலாற்றை நினைவுக்கு கொண்டுவருவதாக இருந்தது.

மத்தேயு மற்றும் லூக்காவிலுள்ள வம்சாவழி பட்டியல் பரவலாக ஒன்றின்மீது ஒன்று சாய்ந்து செல்வதாக இருந்தாலும், அவைகள் ஒன்று போல இல்லை, மத்தேயு, "யூத ஜனங்களின் தகப்பனாகிய" ஆபிரகாமில் இருந்து துவங்கி இயேசுவை நோக்கி முன்னெடுத்துச் செல்கிறார். லூக்கா இன்னொரு விதத்தில், இயேசுவினிடத்திலிருந்து துவங்கி, பின்னோக்கி ஆதாம் வரை மற்றும் பின்னர் சிருஷ்டிகராகிய தேவன் வரை செல்கிறார். இதற்கான காரணம், இந்த இரண்டு எழுத்தாளர்களும் வம்சாவழி பட்டியலை கொடுப்பதற்கு வித்தியாசமான நோக்கங்களை உடையவர்களாயிருந்தார்கள். மத்தேயு இயேசுவை ஒரு உண்மையான இஸ்ரவேலராக, மற்றும் தாவீது ராஜாவின் சந்ததியாக இஸ்ரவேலின் மேசியாவாக இருப்பதற்கு முற்றும் தகுதியானவராக

காண்பிக்க விரும்பினார். லூக்காவின் “உலகம் தழுவிய” வம்சாவழி பட்டியல் இயேசுவை யூத சமயத்தோடு மட்டும் அடையாளப்படுத்தாமல், முழு மனுக்குலத்தோடும் அடையாளப்படுத்துகிறது. சுவிசேஷங்கள் இயேசுவின் இடத்தை யூத வரலாற்றிலும் மற்றும் அவர் குடுப்பத்திலும் உறுதியாக உறுதிப்படுத்துகின்றன. இயேசு யூதா கோத்திரத்திலிருந்து வந்திருந்தார் மற்றும் இஸ்ரவேலரின் போற்றுதற்குரிய நபர்களின் சந்ததியாக, அதே சமயத்தில் சில கெட்ட பெயரெடுத்த பாவிகளின் சந்ததியாகவும் வந்திருந்தார்.

நாம் யோசேப்பு மற்றும் மரியாளைப் பற்றி, அவர்களுடைய குறிப்பிடத்தக்க மகனைத் தவிர, அவர்கள் சாதாரணமான ஒரு யூத தம்பதியாராக இருந்தார்கள் என சிறிதளவே அறிகிறோம். யோசேப்பு ஒரு தச்சராக இருந்தார் (மத்தேயு 13:55), மற்றும் இயேசுவும் அநேகமாக அந்த தொழிலை கற்றிருந்தார். அவர் இன்றும் “நாசரேத்தின் தச்சர்” என அறியப்பட்டிருக்கிறார். யோசேப்பு குறித்து பிறப்பு பதிவேடுகளில் அதிகம் சொல்லப்படுவதில்லை. (லூக்காவைவிட, மத்தேயுவில் அதிகம் சொல்லப்படுகிறது, அவர் மாற்குவில் குறிப்பிடப்படவும் இல்லை.) யோசேப்பு அதன்பிறகு, இயேசுவின் கதையில் எந்த ஒரு இடத்தையும் பெற்றிருக்கவில்லை, இதினிமித்தம், இயேசு வாலிப பிராயத்தை அடைந்தபோது, அவர் (யோசேப்பு) மரித்துப் போயிருந்தார் என யூகிக்கப்படுவதுண்டு, ஆனால் இதை உறுதி செய்ய இயலாது.

மத்தேயு மற்றும் லூக்காவில் கன்னியினிடத்தில் பிறந்தார் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளபடியால் (அல்லது, அதிக துல்லியமாக, “கன்னியின் கருத்தரிப்பு”), மரியாள் யோசேப்பைவிட அதிகம் கவனிக்கத்தக்க நபராக இருந்தாள். நாம் பெரும்பாலும் அவளை இயேசுவின் பிறப்பின்போது, முழுவளர்ச்சியடைந்திருந்த, தன் கணவருடைய அதே வயதையுடைய ஒரு இளம் பெண்ணாக காட்சி படுத்துகிறோம். இருந்தபோதிலும், யூத பெண் பிள்ளைகள் முதலில் “நிச்சயம் செய்யப்பட்டு/நியமிக்கப்பட்டு,” பின்னர் பன்னிரண்டு முதல் பதினான்கு வயதுக்குள் மணம் முடித்து கொடுக்கப்பட்டனர். இது காபிரியேலின் தரிசனம் மற்றும் அறிவிப்பு தொடர்பான ஒரு புதிய கண்ணோட்டத்தை வைக்கிறது! திருமணமாகாத, ஒரு பதினான்கு வயது பெண்ணிடம் அவள் தாய்மை அடைந்து தேவனுடைய குமாரனை பெறுவாள் என்று சொல்லப்பட்டதை கற்பனை செய்து பாருங்கள்! மரியாளுடைய பரிதாப நிலை மற்றும் உண்மைத் தன்மைக்கு அவள், “இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது” என்று அவள் கூறியது ஒரு சான்றாக இருக்கிறது (லூக்கா 1:38). இயேசுவானவரின் பிறப்பிற்குப் பிறகு, மரியாள் சுவிசேஷங்களில் அடிக்கடி தோன்றுவதில்லை. அவளுக்கு அற்புத வல்லமைகள் இருந்ததாக கூறப்படுவதில்லை, மற்றும் கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் ஆராதனையில் அவளுக்கு தொடர்ந்து ஒரு செயல்பாடு இருக்கும் என்று கூறப்படவும் இல்லை. அவள் ஒரு மெச்சப் படத்தக்க கதாபாத்திரமாக காண்பிக்கப்பட்டுள்ளார், பூரணமானவளாக இல்லாதிருந்தபோதிலும் (காணவும் மாற்கு 3:21, 31-35); ஆனால் புதிய ஏற்பாடு அவளை ஒரு பக்தியுள்ள தாய் என்பதைத் தவிர, வேறு எந்த விதத்திலும் காட்சிப்படுத்துவதில்லை.

மரியாள் மற்றும் யோசேப்பு ஆகியோரின் (மற்றும் எனவே இயேசுவின்) பொருளாதார நிலையைப்பொருத்தவரையில் அவர்கள் ஒரு அடித்தட்டு வகுப்பை சேர்ந்த யூத குடும்பமாய் இருந்தார்கள். இவ்வகை மக்கள் அதிக சமய

பற்றுள்ள, மற்றும் யூத சமூகத்தில் அதிகாரம் மற்றும் செல்வாக்கு பெற்றிருந்த பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களால் "தேசத்தின் மக்கள்" என ஏளனமாய் அழைக்கப்பட்டிருப்பார்கள். இது நமக்கு எப்படி தெரியும்? அதற்கான ஒரு தடயம் லூக்கா 2:22-24 இல் கொடுக்கப்பட்டுள்ளது. அது இயேசு இன்னமும் குழந்தையாய் இருந்தபோது தேவாலயத்திற்கு எடுத்துச்சொல்லப்பட்டார் என கூறுகிறது. மோசேயின் பிரமாணம் முதலாவதாக ஒரு ஆண் பிள்ளையை பெற்ற பெற்றோர், ஒரு ஆட்டுக்குட்டியை பலி செலுத்த வேண்டும் என கோரியது. ஒரு ஆட்டுக்குட்டியை பலிசெலுத்த இயலாதவர்கள், "ஒரு ஜோடி காட்டு புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது" செலுத்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தார்கள் (காணவும் லேவியராகமம் 12:6-8), மற்றும் லூக்கா இப்படிப்பட்ட ஒரு ஏழ்மையான பலி இயேசுவுக்காகக் செலுத்தப்பட்டதாக கூறுகிறார். யோசேப்பு மற்றும் மரியாள் ஆகியோர் பாலஸ்தீன சமூக பொருளாதாரத்தின் விளிம்பு நிலையில் இருந்தார்கள் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும்; இருப்பினும் அவர்கள் ஆதரவற்றவர்களாய் இருந்தார்கள் என்ற முடிவுக்கு நாம் வரக்கூடாது, குறைந்த பட்சம், யோசேப்பு ஒரு கைவினைஞராக இருந்தார், இதின் மூலம் தன் குடும்பத்தை போஷிப்பதற்கு போதுமான அளவு சம்பாத்திருக்க கூடாதிருந்தது என நம்புவதற்கு எந்த காரணமும் இல்லை.

அவருடைய பெற்றோர் நீங்கலாக, இயேசு, சகோதரர் மற்றும் சகோதரிகளை உடையவராக இருந்தார். அவர் ஒரே பிள்ளையாக இல்லாமல், நிறைய பிள்ளைகளை கொண்டிருந்த ஒரு வீட்டில் வளர்ந்தார். நான்கு சுவிசேஷங்களும் இயேசு சகோதரர்களை உடையவராக இருந்தார் என்று குறிப்பிடுகின்றன (மத்தேயு 12:46, 47; மாற்கு 3:31, 32; லூக்கா 8:19, 20; யோவான் 7:1-5). மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோர் அவர்களுடைய பெயரைக் கூட குறிப்பிட்டுள்ளனர்: யாக்கோபு, யோசே, சீமோன் மற்றும் யூதா. இயேசுவின் சகோதரர்கள் அவர் பூமியில் இருந்த நாட்களில் அவரை நம்பவில்லை என்பதை யோவான் தெளிவாக குறிப்பிடுகிறார், மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோர் அதை உறுதியாக உணர்த்துகிறார்கள். மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய இருவரும் இயேசு சகோதரிகளை உடையவராக இருந்தார் என்பதை குறிப்பிடுகிறார்கள் (மத்தேயு 13:56; மாற்கு 6:3), ஆனால் அவர்கள் ஒருவருடைய பெயரும் கொடுக்கப்பட வில்லை, இது பண்டை யூத மதத்தின் பழக்கமாக இருந்தது, புதிய ஏற்பாட்டின் சாட்சியத்திற்கு கூடுதலாக, இயேசு யாக்கோபு என்ற பெயரில் ஒரு சகோதரரை உடையவராக இருந்தார் என குறிப்பிட்டதை நினைவில் வையுங்கள், இவர் யூத அதிகாரிகளுக்கு முன் கொண்டுவரப்பட்டதற்காக குறிப்பிடப்பட்டுள்ளார். சிலர் இயேசுவின் சகோதரர் மற்றும் சகோதரிகள் உண்மையில் அவருடைய "ஒன்றுவிட்ட சகோதரர் மற்றும் சகோதரிகளாக" இருந்தார்கள் அல்லது அவர்கள் முன்னதாக யோசேப்பு ஒரு பெண்ணை திருமணம் செய்திருந்ததால் உருவான மாற்றாந்தாய் பிள்ளைகளாக இருந்தார்கள் என கருத்து தெரிவித்துள்ளனர் (இந்த கருத்துக்கு எந்த வரலாற்று ஆதாரமும் இல்லை), இது நமக்குள்ள ஆதாரங்களால் ஆதரிக்கப்படாத ஒரு சாதாரண இறையியல் கொள்கை உருவாக்க முயற்சியாக இருக்கிறது, யோசேப்பு மற்றும் மரியாள் ஆகியோர் வீடு நிறைய பிள்ளைகளை கொண்டிருந்தார்கள் (குறைந்தபட்சம் ஏழு, குறைந்தபட்சம் இரண்டு சகோதரிகள் இருந்தார்கள் என நாம் யூகித்தால்), என்பதே சுட்டிக்காட்டப்படுகின்றன. இது முதல் நூற்றாண்டின் ஒரு பிள்ளையை கொண்டிருந்த குடும்பத்தைவிட, அதிக

பிள்ளைகளை கொண்டிருந்த ஒரு குடும்பத்திற்கு மாதிரியாக இருந்திருக்கக்கூடும். மீண்டும், சாட்சியம் ஒரு அர்த்தத்தை கொடுக்கிறதாக இருக்கிறது.

**இயேசுவின் வாழ்க்கைபாணி**

இயேசுவானவர் ஒரு ''வீடு இல்லாதவராக'' இருந்தார் என விவரிக்கப்படுவதுண்டு, ஏனெனில் அவர் ஒரு முறை, "... மனுஷகுமாரனுக்கு தலை சாய்க்க இடமில்லை" என கூறியிருந்தார் (மத்தேயு 8:20) மற்றும் அவர் கலிலேயாவில் சஞ்சரித்தார் மற்றும் யூதேயாவின் தென் பகுதிகளிலும் நடமாடிக்கொண்டிருந்தார். இருப்பினும், அவர் இடம் விட்டு இடம் பெயர்ந்த போது, தன் தலையின்மேல் ஒரு வழக்கமான மேற்கூரை உடையவராக இருந்தார்.

சமீபத்தில், இயேசுவைப்பற்றி பரிந்து பேசுகிறவர்கள் நேர் எதிரான ஒரு உரிமைகோருதலை, "உடல்நலம் மற்றும் செல்வம் பற்றிய சுவிசேஷம்" (ஒவ்வொருவரும் செல்வந்தவராயிருக்கும்படி தேவன் விரும்புகிறார் என்று கூறுகிறவர்கள்) என்பதை முன் வைக்கிறார்கள். அவர்கள் இவர் ஒரு செல் வந்தராயிருந்தார் என கூறுகிறார்கள் மற்றும் விசுவாசிகள் செல்வந்தராக மாற பிரயாசப்படவேண்டும் என கூறுகிறார்கள். இந்த தனி நபர்கள் யூகிக்கிறார்கள் - இயேசு தனது பிறப்பின்போது (மத்தேயு 2:11) விலையுயர்ந்த பொன், தூபவர்க்கம் மற்றும் வெள்ளைப் போளம் ஆகிய பரிசுகளை பெற்றதாலும் மற்றும் அவரோடு அதிக அளவில் பயணித்தவர்களை போஷிக்க போதுமானவைகள் இருந்ததாலும் - அவர் ஒரு செல்வந்தராக இருந்திருக்கவேண்டும் என யூகிக்கிறார்கள். இயேசு ஆதரவற்றவராக இருந்தார் என்பதற்கு எந்த அறிகுறிகளையும் நாம் காண்பதில்லை, அதே வேளையில் நிச்சயமாவே செல்வத்தைப்பற்றி எதுவும் சுட்டிக்காட்டுவதில்லை. அவருடைய போதனைகளால் அவர் அப்படிப்பட்டவராக இருந்திருக்க சாத்தியமில்லை (மத்தேயு 8:20; லூக்கா 12:13-21; 16:19-31) மற்றும் இன்று செல்வந்தராவதை முன்னுரிமையாக கொண்டுள்ளவர்களுக்கு அது ஆறுதலை தருவதில்லை என்பதை உணர்த்துகிறது. மேலும் இயேசுவானவர் அப்போஸ்தலர் குழுவினருக்கு தனது சொந்த வளங்களிலிருந்து போஷிக்கவில்லை; லூக்கா 8:1-3 அவரோடும் அவருடைய அப்போஸ்தலரோடும் பயணம் செய்த பெண்கள், "தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து கொண்டு வந்தார்கள்" என்று கூறுகிறது.

இயேசு நிறைய விரோதிகளை உடையவராக இருந்தார் என்பது தெளிவாக இருக்கிற வேளையில் சுவிசேஷங்கள் அவர் நம்பகமான நட்புறவுகளை கொண்டிருந்தார் என்பதை சுட்டிக்காட்டுகிறது. பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மூன்று ஆண்டுகளில் பெரும்பாலானவற்றை அவரோடு பயணித்ததாலும், அவரிடம் கற்றுக்கொள்வதிலும் செலவளித்தார்கள். அப்போஸ்தலர் நடபடிகள் 1:15-26 பிற மனிதர் அவரோடு இருந்தார்கள் என்றும் மற்றும் யூதாஸின் இடத்தை நிரப்பத் தகுதியான இருவர் அவருடைய பொதுவான ஊழியம் முழுவதும் அவரோடு இருந்தார்கள் என சுட்டிக்காட்டுகிறது. லூக்கா 8ல் கூறப்பட்டுள்ள பெண்களையும் சேர்த்து, பல்வேறு சமயங்களில் தீர்மானிக்க முடியாத அளவு மக்கள் அவரோடு பயணம் செய்தார்கள். லூக்கா 10:1 இயேசு தான் ஊழியம் செய்ய விரும்பின கிராமங்கள் மற்றும் பட்டணங்களுக்கு தமக்கு முன்பாக எழுபது பேரை அனுப்பினாரென்று கூறுகிறது. இந்த மக்களில் எவரும்

இயேசுவின் நண்பர்கள் என அழைக்கப்பட முடியும்.

லூக்கா 10:38-42, மரியாள் மற்றும் மார்த்தாள் என்ற ஒரு சகோதரிகள் வாழ்ந்த வீட்டை இயேசு பார்வையிட்டதை பதிவு செய்கிறது. நாம் யோவான் 11ல் இந்த இரு சகோதரிகளும் லாசரு என்ற பெயரில் ஒரு சகோதரரை கொண்டிருந்தார்கள் என்பதையும் மற்றும் இயேசு அவரையும் அந்த இரண்டு சகோதரிகளையும் "சிநேகித்தார்" என்பதையும் நாம் கற்றுக் கொள்கிறோம் (3, 5, 36 வசனங்கள்). இயேசு தமது சீஷர்கள் அல்லாதவர்களிடத்திலும் அதிக நெருக்கமாக இருந்தார். இயேசு எத்தனை நெருக்கமான சிநேகிதர்களையுடையவராக இருந்தார் என்பதை நாம் அறிந்து கொள்வதற்கு வழியில்லை, ஆனால், அவருடைய வேண்டுகோள்களுடைய ஒருவர் நிறைய நண்பர்களை பெற்றிருப்பார் என்பதில் ஆச்சரியமில்லை, சிறப்பாக, அவர் தனது இடத்தை விட்டு கீழ் இறங்கி யூத சமுதாயத்தின் மிகவும் இகழப்பட்ட சமூக அடுக்கு பிரிவினரிடமும் மிகவும் அன்பு பாராட்டினார் (லூக்கா 15:1, 2; 19:1-10).

### மொழி, கல்வி மற்றும் பயணங்கள்?

குறிப்பிடத்தக்க துவக்கம் மற்றும் இறுதி மூன்று ஆண்டுகளைத் தவிர, இயேசுவின் வாழ்க்கை மிகவும் சாதாரணமான ஒன்றாகவே இருந்தது என்பதற்கான அறிகுறிகள் உள்ளன. இதற்கு காரணம் சுவிசேஷங்கள் ஏறக்குறைய அவரது இரண்டு வயது துவங்கி முப்பது வயதுவரை உள்ள இடைப்பட்ட காலத்தை பற்றி ஒன்றும் கூறுவது இல்லை (அவருக்கு பன்னிரண்டு வயதான போது நடந்த ஒரு சம்பவம் தவிர). அவர் அநேகமாக, எல்லா விதங்களிலும் ஒரு சாதாரண யூத வாலிபருடைய வாழ்க்கையை வாழ்ந்தார்.

ஒரு சாதாரணமான முதல் நூற்றாண்டு யூதர் என்பதை தவிர, இயேசு என்ன மொழிகளை பேசியிருக்கக் கூடும்? எந்த கேள்வியுமில்லாமல், அவர் அரமேயி பேசினார், அது எபிரெயர்கள் பேசின பாலஸ்தீனத்தின் ஒரு பொதுவான வட்டார மொழியாக இருந்தது. சுவிசேஷங்கள் இயேசு சில அரமேய வார்த்தைகளை பயன்படுத்தியதை, *அப்பா,* போன்ற வார்த்தையை பயன்படுத்தியதை பதிவு செய்கிறது. அது அவர் தன் தேவனை, "பிதாவே" என்று குறிப்பிடும் முறையாக இருந்தது (மாற்கு 14:36), மேலும் அவர் சிலுவையிலிருந்து கதறினார்: *ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி* - "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" (மத்தேயு 27:46). அவர் கலிலேயாவில் வளர்ந்தார், அது கிரேக்க கலாச்சாரத்தின் அதிக தாக்கமுடைய பகுதியாக இருந்தது, மற்றும் கிரேக்க நாகரீக பட்டிணமாகிய செப்போரிஸ் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருந்ததாலும், அவர் கொய்நே ("பொதுவான" இலக்கிய நடைக்கு எதிரானது) அதாவது இலக்கிய நடை கிரேக்க மொழிக்கு மாறாக, சாதாரண உரைநடை கிரேக்க மொழி பேசினார்.[3] மத்தியதரைக்கடலை ஒட்டிய பகுதியில், வணிகம் மற்றும் தொடர்புக்கான, நாடுகளுக்கிடையிலான மொழியாக கிரேக்க மொழி உறுதியாக திகழ்ந்தது. இது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பாக மகா அலெஸ்ஸாண்டர் அந்த பகுதியில் கிரேக்க கலாச்சாரத்தை பரப்பியிருந்தார் (கிரேக்க கலாச்சாரத்தை திணித்தார்) என்பதற்கு சான்றாக இருக்கிறது. பாலஸ்தீனம் ரோமர்களால் பிடிக்கப்பட்டிருந்ததால் இயேசுவானவர் சிறிதளவு இலத்தீன் மொழியை அறிந்திருந்தார் (அல்லது குறைந்த பட்சம் புரிந்து கொண்டார்). இயேசு பிலாத்துவால் விசாரிக்கப்பட்டது, அவர்கள் எந்த

மொழியை பயன்படுத்தினார்கள் என்ற வினாவை எழுப்புகிறது. அவர்கள் ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலம் பேசியிருந்து சாத்தியமானதாக இருந்தது. இயேசு சரளமாக இலத்தீன் மொழி பேசாமலிருந்தாலும், பிலாத்து அரமேய மொழியில் பேசியது சாத்தியமானதாக இருந்தது. நாம் பாதுகாப்பான முடிவுக்கு வரலாம். அரமேய மொழி இயேசுவின் "இதய மொழியாக" இருந்தது. அவர் அநேகமாக கிரேக்க மொழியை அறிந்திருந்தார், சாத்தியமானவரை இலத்தீன் மொழியையும் அறிந்திருந்தார்.

இயேசுவானவர் ஒரு முறையான பயிற்சி பெற்றதாக புதிய ஏற்பாட்டில் எதுவும் கூறப்படவில்லை. அவர் அநேகமாக வீட்டிலேயே கல்வி கற்பிக்கப்பட்டார், பெரும்பாலான யூத குடும்பங்களில் இது பழக்கமாக இருந்தது மற்றும் நாசரேத்திலிருந்த உள்ளூர் ஜெபஆலயத்திலிருந்து சில போதனைகளையும் பெற்றிருந்தார். (லூக்கா 4:16 அவர் தவறாமல் ஜெபஆலயத்தில் கலந்து கொண்டார் என்பதை சுட்டிக் காட்டுகிறது.) சில யூத குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறப்பு பயிற்சியாளர்களை நியமித்தன; ஆனால் யோசேப்பு ஒரு தொழிலாளியாக இருந்தார் என்பதை கவனிக்கும்போது, இப்படிப்பட்ட ஒரு சொகுசு வசதிக்கு செலவழிக்க அவருக்கு சாத்தியம் இருந்திருக்காது என்றே தோன்றுகிறது. லூக்கா 2:41-52 இயேசு தனக்கு பன்னிரண்டு வயதாக இருந்தபோது நியாயசாஸ்திரிகளோடு உரையாடியதையும் மற்றும் "அவர் பேசக் கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங் குறித்து பிரமித்தார்கள்" என்பதையும் பதிவு செய்கிறது (வசனம் 47). இருப்பினும், லூக்கா இதை அவருடைய உலக கல்வியின் சிறப்பாக குறிப்பிடவில்லை, அநேகமாக இது இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தபடியால் தானாக வந்தது என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள எதிர்பார்த்தார். இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து, "அவர் அவர்களுடனே (மரியாள் மற்றும் யோசேப்பு) கூடப் போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்கு கீழ்ப்படிந்திருந்தார் ..." என்பதையும் குறிப்பிடுகிறார் (வசனம் 51). இது அவர் தனது பிள்ளை பருவத்தை மிகவும் சாதாரணமான முறையிலேயே நிறைவு செய்தார் என்பதை காட்டுகிறது. இயேசுவின் உலக கல்வி குறித்து சிறிதளவே நமக்கு தகவல் அறிய கிடைத்தாலும் சிலர் உரிமை கோருவதுபோல அவர் கல்லாதவராயிருந்தார் என்பது சாத்தியமல்ல - சிறப்பாக லூக்கா அவர் நாசரேத்து ஜெபஆலயத்தில் உரத்த சத்தமாய் வாசித்தார் என குறிப்பிட்டுள்ளார் (4:16-20).

இயேசு குழந்தையாக இருந்தபோது, எகிப்தில் சிறிது காலம் தங்கியிருந்தது தவிர, அவர் பாலஸ்தீனத்தை விட்டு வெகுதொலைவு இடங்களுக்கு பயணம் செய்ததற்கான சான்றுகள் இல்லை.[4] அதேபோல, அவருக்கு எப்போதாவது திருமணம் ஆனதா அல்லது குழந்தைகளுடையவராக இருந்தாரா என்பது பற்றி கூறும் வரலாற்று ஆதாரங்கள் எதுவும் இல்லை. இயேசுவைக் குறித்து இப்படிப்பட்ட கதைகள் புனையப்படுவதுண்டு, ஆனால் நம்முடைய அக்கறை எல்லாம் யூகம் அல்லது புராணத்தைப் பற்றியதல்ல, மாறாக அது வரலாற்றைப் பற்றியதாக இருக்கிறது. ஒரு வரலாற்று கண்ணோக்கில் இவைகளில் எதுவுமே நிகழவில்லை.

ஒரு சாதாரண சமூக சூழ்நிலையிலிருந்து வந்து, சாதாரண சுற்று சூழலில் வாழ்ந்த ஒருவர், ஒருபோதும் தன்னுடைய நாட்டைவிட்டு வெளியே

*பிரயாணம் செய்யாத ஒருவர், இன்றைக்கும் நினைவுகூரப்படுவது மற்றும் மக்களுடைய கவனத்தின் மையமாக பிரமிப்பூட்டக்கூடியதாக இருக்கிறது. இயேசுவானவர் ரோமபேரரசின் காலத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தார் மற்றும் மரித்தார். அவர் தனது வாழ்வின் பெரும்பாலான பகுதியை ஒரு சாதாரண கிராமத்தவராக (அவர் சாதாரணமானவர் என்பதைவிட வேறு எவ்விதமாகவும் இருக்கவில்லை) செலவழித்தார் மற்றும் தனது முப்பத்தி மூன்றாம் வயதில் சிலுவையில் அறையப்பட்டு மரணத்தை அனுபவித்தார். அவருடைய வாழ்க்கை பெரும்பாலான அளவீட்டின்படி, நீண்டதாக இருக்கவில்லை, ஆனால் அது மிகவும் முக்கியமான ஒன்றாக இருந்தது. எந்த அளவு முக்கியமானதாக இருக்கிறது? நாம் இன்றும் இன்னமும் அவரைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம்.*

---

குறிப்புகள்

[1]*மற்ற நான்கு பேர் ஏரோது அந்திபாஸ் (மத்தேயு 14:1) யோவான் ஸ்நானகன் தலையை வாங்கினவர்; அந்திபாஸின் சகோதரர் பிலிப்பு, அந்திபாஸ் இவருடைய மனைவியை மணந்திருந்தார், அது யோவானின் சிரைச்சேதத்தில் முடிந்தது (மாற்கு 6:17); ஏரோது அக்கிரிப்பா* I *(நடபடிகள் 12), அப்போஸ்தலனாகிய யாக்கோபை கொலை செய்தவன்; மற்றும் ஏரோது அக்கிரிப்பா* II *(நடபடிகள் 26), இவர் பவுலுடைய தற்காப்பு வாதத்தை கேட்பவர்.* [2]*பயனுள்ள விவாதங்கள் மற்றும் வரைபடங்கள் டிம் டவ்லியில் காணப்படுகிறது The Kregel Bible Atlas* (Grand Rapids, Mich.: Kregel Publications, 2002). [3]*கொய்னே அல்லது "பொதுவான" கிரேக்க மொழி இயேசுவின் நாளில் பரவலாக பேசப்பட்டது மற்றும் அது இலக்கிய மொழி நடையிலிருந்து வேறுபட்டது.* Craig A. Evans, *என்பவர் கிரேக்க மொழியின் செல்வாக்கு செப்போரிஸ் என்ற இடத்தில் கி.பி. 70 க்கு முன்பைவிட அதற்கு பின்பு முற்பகுதியில் அதிகமாக அறியப்பட்டிருந்தது என சுட்டிக்காட்டுகிறார். இருப்பினும், பல கலிலேய யூதர்கள் ஒருவிதமான கிரேக்க மொழி பேசினார்கள் என்பதை அவர் அங்கீகரிக்கிறார்.* (Craig A. Evans, *Fabricating Jesus: How Modern Scholars Distort the Gospels* [Downers Grove, Ill.: InterVarsity Press, 2006], 113-22.) [4]*துரதிஷ்டவசமாக, இது மக்கள் இயேசுவுக்காக பல பிரயாணங்களை உற்பத்தி செய்ய முயற்சிப்பதிலிருந்து அவர்களை தடுப்பதில்லை. ஒரு சமீபகால உதாரணம்* William W. Mountcastle *என்பவருடைய The Secret Ministry of Jesus: Pioneer Prophet of Interfaith Dialogue* (New York: University Press of America, 2007), *இது இயேசு இந்தியா, திபெத் மற்றும் சீனா போன்ற இடங்களில் இரகசிய ஊழியம் செய்தார் என்ற வரலாற்று ரீதியான சர்ச்சைக்குறிய அடிப்படைகளை அது உரிமை கோருகிறது.*